**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 (கடன் இல. 2947 எஸ்ஆர்ஜ மற்றும் 2948 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) - 2015**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் 2.10 ஆம் பிரிவுடன் சேர்த்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் 2948-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டமானது (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமை புனரமைத்து வரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற தண்ணீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாகத்தில் கழிவுநீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்கள் மற்றும் முகாமையின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல், (ஈ) முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துதல் என்பவற்றினை எதிர்பார்க்கின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியனாகும் அதில் ரூபா 11,088 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் அல்லது 75 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 3,696 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் அல்லது 25 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான

செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டக்கூடியவாறு போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட, ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 02 என அழைக்கப்பட்ட வேறு செயற்திட்டத்தின் சார்பில் நிகழ்ச்சித்திட்டத்தால் செலவிடப்பட்ட ரூபா 2.45 மில்லியன் தொகை வேறு செயற்திட்டங்களிலிருந்து அறவிடவேண்டிய தொகையாக கணக்கிடுவதற்குப் பதிலாக சிவில் நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்காக பாமன்கடையில் காணி கொள்வனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 10 மில்லியன் தொகையான முற்பணங்களும் இந்த செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட வழங்கல் முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், நிதி நிலமைக்கூற்றில் காட்டப்பட்ட வேறு நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து அறவிடவேண்டிய மீதிகள் ரூபா 12.45 மில்லியனால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(ஆ) 2947 எஸ்ஆர்ஜ மற்றும் 2948 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன்களின் கீழ் செய்யப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கியால் அறவிடப்பட்ட முறையே ஐ.அ.டொலர் 14,692 மற்றும் ஐ.அ.டொலர் 268,340 ஆன வட்டி மீளாய்வாண்டிற்கான கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லலை.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2010 யூலை மாதத்தின் 5 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 84 | 11,088 | 1,350 | 10.31 | 1,353 | 17.49 | 2,285 |
| இலங்கை அரசாங்கம் | 28 | 3,696 | - | 6.20 | 866 | 7.38 | 1,021 |
| மொத்தம் | 112 | 14,784 | 1,350 | 16.51 | 2,219 | 24.87 | 3,306 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் ஒதுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களின் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு நிகழ்ச்சித்திட்ட முழுக்காலத்தையும் மேவுகை செய்து மாதாந்த, காலாண்டு, அரையாண்டு போன்றவற்றில் பொறுப்புக்களை நிர்ணயித்து நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும், அத்தகைய திட்டம் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் தொடங்கி 2 ½ ஆண்டுகள் கடந்த பின்னரும் நிகழ்ச்சித்திட்டத்தால் தயாரித்து அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பாக 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் நிதியேற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்காத போதிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளிலிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 866 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயலாற்றல்

நிகழ்ச்சித்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டு இறுதியில் முறையே 6.45 சதவீதம் மற்றும் 21.68 சதவீதத்தினால் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் இலக்கினை விட பின்தங்கி இருந்தன. நிகழ்ச்சித்திட்டத்தால் அமுலாக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பௌதீக முன்னேற்றங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயன்முன்னேற்றத்தின் சதவீதம் | |
|---|---|---|
| | **இலக்கு** | **உள்ளபடியானது** |
| கொழும்பு- வடக்கில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமையின் புனரமைப்பு | 21 | 8 |
| கொழும்பு- கிழக்கில் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமையின் புனரமைப்பு | 4 | 2 |
| முறைமை உள்ளீட்டுத் தொகுதி மீற்றரினை வழங்கி பொருத்துதலும் ஒப்படைத்தலும் | 10 | 5 |
| தானியங்கி வாசிப்பு மானியை வழங்கி பொருத்தி ஒப்படைத்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான உபகரணங்களினை வழங்கி விநியோகித்தல் மற்றும் பொருத்துதல் | 15 | 12 |
| நீர்க்கசிவு தடுப்பு மற்றும் ஏனைய தொடர்புபட்ட சகல உபகரணங்களின் வழங்கல் மற்றும் பொருத்துதல் | 100 | 30 |

நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்பாக பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மாளிகாகந்தவில் எலிகவுசில் (மின்சார வீடு) அலுவலக கட்டிட நிர்மாண நடவடிக்கைகள், வருமானமற்ற தண்ணீர் முகாமைத்துவத்திற்கான ஆலோசனை வேலைகள் மற்றும் பொதுமக்கள் விழ்ப்புணர்வு பிரச்சாரம் போன்றவற்றினை தொடங்குவதற்கு நிகழ்ச்சித்திட்டத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஆகஸ்ட் 20 இன் மீளாய்வு குறிக்கோள் அறிக்கையின் கால எல்லை செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் தண்ணீர் பாவனையாளர் சமுகத்தினரின் இயலளவை கட்டியொழுப்புவதற்காக பொது மக்கள் விழ்ப்புணர்வு மற்றும் ஊடக பிரச்சாரம் மற்றும் ஆலோசனையாளரை அணி திரட்டல் தொடர்பான நடவடிக்கைகள் 2015 ஒக்தோபர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 16.16 மில்லியன் கிரயத்தில் வெளிநாட்டு கம்பனியொன்றிற்கு 2014 மே 29 இல் நீர்க்கசிவு தடுப்பை வழங்கி பொருத்துல் மற்றும் தொடர்புபட்ட உபகரணங்கள் மற்றும் பொருத்துதல் என்பவற்றிற்கான ஒப்பந்தம் ஒப்பந்தகாரருடனான புரிந்துணர்வு உடன்படிக்கையால் இடைநிறுத்தப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டமானது போட்டி கேள்வி செய்முறையை பிரயோகிக்காமலும் ஒப்பந்த உடன்டிக்கையொன்று இல்லாமலும் மேற்குறிப்படப்பட்ட கம்பனியின் உள்ளூர் பிரதிநிதி ஊடாக உள்ளூர் சந்தையிலிருந்து ரூபா 10.62 மில்லியன் கிரயத்தில் உரிய உபகரணத்தின் பாகத்தை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. மேலும், உபகரணத்தின் உத்தரவாதம் மற்றும் பராமரிப்பிற்காக மேற்குறிப்பிடப்பட்ட உள்ளூர் பிரதிநிதியுடன் 2015 ஒக்தோபர் 26 இல் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைசாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தரின் பதவிநிலை குறிப்பிடப்படாமையாலும் கம்பனி மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் உத்தியோகபூர்வ முத்திரை அவற்றில் இடப்பட்டிருக்காமையாலும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் சட்டவலிமை கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக இருந்தது.

**3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்த போதிலும், கொழும்பு வடக்கு மற்றும் கொழும்பு கிழக்கில் வருமானமற்ற தண்ணீரை குறைப்பதற்கான முறைமையின் புனரமைப்பிற்கான ஒப்பந்தங்கள் முறையே 2014 ஒக்தோபர் 30 மற்றும் 2015 மார்ச் 12 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் முறையே 2018 யூலை 05 மற்றும் 2019 யூலை 13 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென உடன்பபடு காணப்பட்டிருந்தது. ஆதலால், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கல் திகதி நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதியை கருத்திற்கொள்ளாமல் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பதை இது குறிக்கின்றது.

(ஆ) மாதாந்த வாடகை ரூபா 600,000 இல் 2014 ஒக்தோபர் 30 இலிருந்து வாடகை அடிப்படையில் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவிற்காக வேறு கட்டிடம் பெறப்பட்டிருந்த பின்னரும் அலுவலக கட்டிடத்திற்காக மீளாய்வாண்டின் போது தொடர்ச்சியாக ரூபா 1.68 மில்லியன் கூட்டுத் தொகையான வாடகைகள் செலுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது வாடகைக்கமர்த்தப்பட்ட 06 மோட்டார் வாகனங்களிற்காக வாடகைகளாக ரூபா 22.29 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த அதேநேரம் நிகழ்ச்சித்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட 06 ஏனைய மோட்டார் வாகனங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் ரூபா 2.08 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் கணனி உபபாகங்கள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.